## இராக்கச்சி அம்மன் (மனோன்மணி கோவில்)

இது வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் கடற்கரைக்கு செல்லும் வாடிஒழுங்கையில் தற்சமயம் ஆதிகோவிலடி மக்களால் அமைக்கப்பட்ட மோர்மடம் மற்றும் ஆதிசக்தி கல்விமன்றம் இவற்றிற்கு சமீபமாக அமைந்துள்ளது. இவ் வாடிஒழுங்கை வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோடிக்கரையிலிருந்து வந்து இறங்கிய ஐதீகக் கதையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள ஒழுங்கை ஆகும். இந்த இராக்கச்சிஅ ம்மன் கோவில் பற்றி பின்வருவோர்கள் மூலம் பெற்ற தகவல்களை இங்கு தருகின்றோம்.

**2006 ஆம் ஆண்டு மே மாதம் வெளியிடப்பட்ட "*வரலாற்றில் வல்வெட்டித்துறை*" எனும் நூலில் ஆசிரியர் திரு.பா.மீனாட்சிசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதை அப்படியே கீழே பிரசுரிக்கின்றோம்.**

வல்வை சிவன் கோவிலுக்கான கட்டட வேலைகளுக்காக இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த ஆச்சாரிமார்கள் வாடி ஒழுங்கையில் தங்கி இருந்த காலத்தில் இது அவர்களினால் ஆதரிக்கப்பட்டதாக எம் முன்னோர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அவர்களினால் ஒரு சிறு கொட்டில் அமைக்கப்பட்டு ஒரு வாங்கிலில் வாள் ஒன்று வைத்துப் பூசை செய்து வந்ததாகவும் தெரிய வருகின்றது. அந்த ஆசாரிமார் இந்தியா திரும்பியதும் பின்னர் இக்கோவில் ஆதரிக்கப்படாமல் பல காலமாக இருந்துள்ளது. காலப்போக்கில் இந்திய ஆச்சாரியால் ஆதரிக்கப்பட்ட அந்தத் தெய்வம் அருகிலுள்ள ஒரு உணா மரத்தில் தங்கியிருப்பதாகவும் தனக்கு பூசை செய்யும்படியும் பக்தர் ஒருவருக்கு சாமி வந்து கூறியிருக்கின்றார். இதன் பிரகாரம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவுப் பூசை நடைபெற்று வந்தது. இப்படி நடந்து கொண்டிருக்கும் நாட்களில் பத்து வயதுச் சிறுமி ஒருவருக்குச் சாமி வந்து இப்பகுதியில் குழந்தை ஒன்றினைக் கொலை செய்த ஒருவரைக் காட்டுகிறேனென்று கூறி பூசகரையும் ஏனையோரையும் அழைத்துச் சென்று ஒரு வீட்டிற்கு கூட்டிச்சென்று கொலை செய்த நபரையும் கொலை செய்வதற்காக பயன்படுத்தி மறைத்து வைத்திருந்த பொருட்களையும் காட்டி கொலையின் மர்மத்தை வெளிப்படுத்தியுள்ளார். சில நேரங்களில் இரவுவேளைகளில் அந்த உணா மரத்தின் மேல் கொப்புகளில் தீப்பற்றி எரிவதை அப்பகுதி மக்கள் பார்த்ததாகவும் கூறியுள்ளார்கள்.

பிற்காலத்தில் அந்த உணா மரம் பட்டுப்போக அவ்விடத்தில் ஒரு வேப்ப மரம் உண்டாகியது. சிலகாலம் இவ் வேப்பமரத்திற்குப் பூசைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. கடந்த வருடம் இந்த வேப்பமரம் இருந்த இடத்தில் கற்கட்டமாக ஒரு சிறிய ஆலயம் அமைக்கப்பட்டு மனோான்மணி அம்மன் விக்கிரகம் பிரதிட்டை செய்யப்பட்டு சைவக்குருமார்களினால் நித்திய பூசைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கோவில் சம்மந்தமான ஒரு உண்மைச் சம்பவத்தை **அடியார் ஒருவர்** கீழ்வருமாறு என்னிடம் விபரித்தார். இக்குறித்த ஆண்டுப்பகுதியில் தொகுப்பாளராகிய நான் வெயியூரில் வங்கியில் கடமை புரிந்தாலும் நானும் இது பற்றி அறிந்திருந்தேன்.

1976 ஆம் ஆண்டு வல்வெட்டித்தறை ஆதிகோவிலடியில் அமைந்திருக்கும் ஆதிசக்தி வாசிகசாலையில் புரட்டாதி மாதம் சரஸ்வதி பூசை நடைபெற்றுக்கொண்டிருந்த காலம் இரவு 10-11 மணிவரை நிகழ்வுகள் நடைபெற்று பூசை நிறைவு பெறுவது வழக்கம். அந்த ஒரு நாளில் இரவு 2 1/2 வயது பெண் குழந்தை ஒன்று அந்த இடத்தில் காணாமற்போய்விட்டது என்று பெற்றோர்கள் தேடினார்கள். அதை அறிந்த உறவினரும் வந்து அவர்களுடன் சேர்நது இரவிரவாக தேடினார்கள். வெகு நேரம் தேடியும் குழந்தை கிடைக்கவில்லை. ஏமாற்றத்துடனும்

கவலையுடனும் பெற்றோர்கள் வீடு சென்றுவிட்டனர். அந்த இரவு விடியும் வேளையில் அக் குழந்தை, இவர்கள் தேடித்திரிந்த இடத்தில் உயிரற்ற நிலையில் பிணமாக போடப்பட்டு இருந்ததைக் கண்டு ஊர் மக்கள் எல்லோரும் மிகவும் அதிர்ச்சியடைந்தனர். யார் இந்தக் கொலையை செய்தார்கள் என்று தெரியவில்லை. பொலிசாரும் வந்து பார்வையிட்ட பின் பிணத்தை எடுத்து அடக்கம் செய்தனர். பின்பு பொலிசார் விசாரணைகளை அந்தப் பகுதியில் வாழும் மக்கள் மத்தியில் கடுமையான முறையில் மோப்ப நாய்கள் வைத்து தேடியும் இந்த கொலையாளியை கண்டு பிடிக்க முடியவில்லை. நாட்கள் கடந்து வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகின. பொலிசாரும் விசாரணையை நடத்திக் கொண்டே இருந்தார்கள். இந்த விசாரணையில் சம்மந்தப்பட்ட நபர் உட்பட ஊரிலுள்ள அனைவரும் அடங்கினர்.

மாதங்கள் மூன்று கடந்த நிலையிலும் பொலிசார் விசாரணை செய்து முடியவில்லை. இந்தக் கொலையை செய்தவர்களை கண்டு பிடிக்க முடியாமல் ஊரில் பெரும் பதற்றம் நிலவிக் கொண்டே இருந்தது. ஊரில் உள்ள மக்கள், குழந்தையின் பெற்றோர்கள் இதனால் விரக்தியடைந்து இந்த தெய்வங்கள் கூட இதைக் காட்டித்தரக் கூடாதா என அங்கலாய்த்தார்கள். இந்த வேளையில்தான் ஒரு நாள் மாலைநேரம் இராக்கச்சி அம்மன் ஆலயத்திற்கு அருகில் இருந்த 12 வயது பெண் பிள்ளைக்கு (இவர் தில்லையம்பலம் மகள் ஜெயலட்சுமி ஆகிய லதா) அன்றுதான் முதன் முதலாக சாமி வந்து ஆடுகின்றது. எல்லோரும் வேடிக்கை பார்ப்பது போல பார்க்கின்றனர். சிரித்து பரிகாசம் செய்கின்றனர். இந்த நிலையில் ஒரு பெரியவர், ஆடுகிற சாமியிடம் நீங்கள் என்ன தெய்வம்? எதற்காக இந்த சின்னப்பிள்ளையில் வந்து ஆடுகின்றீர்கள்? என்று கேட்டதற்கு நான் இராக்கச்சி அம்மன் வந்திருக்கின்றேன் என்றும் **என்னுடன் சிலர் வர வேண்டும்** என்பனவற்றை மட்டும் கூறியது. சாமி கேட்டதற்கு சாமியுடன் போவதற்கு கூட பெரியவர்கள் மனமில்லாமல் சாமியை பகிடி பண்ணி விட்டுச் சென்றுவிட்டார்கள். பின்பு சாமி அந்த இடத்தை விட்டு புறப்பட்டு வாடிஒழுங்கையின் பிரதான வீதிக்கு வந்து மேற்குப் பக்கம் ஆலடியைப் பார்க்க ஆடி ஆடி வருகின்றது. சாமியுடன் கூட வருபவர்கள் சிறுவர்களும் சிறுமியரும்தான். அதை பார்க்கும் பொழுது சிறுவர்கள் விளையாடி வருகிறார்கள் போன்ற காட்சியையே காணக் கூடியதாக இருந்தது. வீதியில் வந்த பெரியவர்கள் இதனைப் பார்த்து சிரித்து கொண்டே போனார்கள். இப்படியே சாமி ஆடி ஆடி ஆலடியைத் தாண்டிச் சென்று குழந்தை கொலையுண்ட வீட்டு வாசலில் நின்று தன்னுடன் ஒரு ஆளை வரும்படி அழைத்துக் கொண்டு ஆதிகோவில் பெரிய ஒழுங்கையில் இறங்கி வருகின்றது. அப்பொழுது பொலிசாரும் அந்த இடத்தில் நிற்கின்றார்கள். அவர்களும் இதைப் பார்த்து சிரிப்பதைக் காணக் கூடியதாக இருந்தது. சிறுவர்களும் ஒரு வயோதிப மாதுவையும் தவிர சாமியடன் எவரும் வரவில்லை. இப்படியே சாமி வந்து சம்மந்தப்பட்ட நபர் வீட்டற்கு முன் நின்று ஆடுகின்றது. அப்பொழுது அங்கு வசித்துவந்த பெண் கேவலமான வார்த்தைகளால் சாமியையும் சிறுவர்களையும் பேசுகின்றார். அப்பொழுதுதான் சில இளைஞர்கள், பெரியவர்கள், பெண்கள் இந்த இடத்திற்கு வந்தார்கள். இந்தக் கூட்டத்தைக் கண்டு மேலும் ஊர் மக்கள் கூடிவிட்டனர். அப்பொழுது அங்கு நின்ற இளைஞர்களுள் ஒருவரை (செந்திவேல் மகன் குட்டித்தம்பி) தலையில் பிடித்து என்னுடன் வாருங்கள் இந்தக் கொலையை செய்தவரை காட்டுகிறேன் என்று கூறி சம்மந்தப்பட்ட வீட்டிற்குள் அழைத்துச் சென்றது. அங்கு வீட்டற்குள் ஓர் மூலையில் கிண்டச் சொல்ல அந்த இளைஞர்களும் கிண்டினார்கள். அங்கு பொலிசாரும் வந்து விட்டார்கள். கிண்டப்பட்ட கிடங்கில் கொலையுண்ட பெண் குழந்தையுடைய தங்க நகைகள் மீட்கப்பட்டன. இதை பொலிசார் ஊர் மக்கள் நேரில் கண்டனர். இதன் பின் உடனடியாக இந்த வீட்டில் இருந்த பெண் கைது செய்யப்பட்டார் எனக் கூறி இராக்கச்சி அம்மனின் புதுமையை எடுத்துக்கூறி அவ்வடியார் பரவசமடைந்தார்.

இச்செய்தி எங்கும் பரவியதும் அம்மனின் அருளாட்சியும் எங்கும் பரவலாயிற்று.

இக்காலப்பகுதியில் வாடி ஒழுங்கையில் வசித்து வந்த திரு ஏகாம்பரம் என்பவர் (வெள்ளைத்தேவனின் சகலன்) **உணாமரத்துடன்** அண்டியதான முற்பகுதியில் சீமெந்திலான ஒரு

சிறிய அமைப்பை உண்டாக்கினார். இது 4 அடி உயரம் கொண்டதும் கற்பீடத்தை மையமாகக் கொண்டதுமான 5 அடி சீமெந்துத்தட்டு (பிளாற்) ஒன்றையும் முகப்பில் பொங்கல், நெய்வேத்தியம் என்பன படைக்க கூடியதான பீடத்தையும் கொண்டு அமைக்கப்பட்டது.

இவ்வாறான காலப்பகுதியில், விசேடமாக அம்மன் திருவிழாக்காலத்தில் கரகம், பாற்குடம் போன்றவையும் இங்கு வந்து வழிபட்டுச் செல்ல தொடங்கின.

**மேலும் இன்று (25.05.2018) தொகுப்பாளராகிய நான் திரு.தில்லையம்பலம் ஜெயராஜ் அவர்களிடம் வரலாற்று விபரங்களை சேகரித்த போது பின்வரும் விடயங்களை அறியக்கூடியதாக உள்ளது.**

இவரின் ஞாபகப்படி 1970களில் **வெள்ளைத்தேவன்** என்பவர் (லைற் தட்டுபவரின் மகன்) ஏற்கனவே அங்கிருந்த கற்பீடமொன்றிற்கு பிரதி வெள்ளிக்கிழமையும் நீராட்டி மலர்கள் தூபி வழிபட்டு வந்துள்ளார். சில வருடங்கள் இவர் இப்பணியை செய்து வந்துள்ளார். இக்காலப்பகுதியில் இவருடைய ( குட்டிச்சி என அறியப்பட்ட) மனைவிக்கு கலை வந்து ஆடித் தணிவதுண்டாம்.

இதனைத் தொடர்ந்து ஏற்கனவே சிறு கட்டிடம் அமைத்த அதே திரு. ஏகாம்பரம் அவர்கள் **(பொன்னுச்சாமி சாஸ்திரியாரின் மகன்** ) 12-15 அடி நீளமான ஒரு கொட்டகையை, உணாமரத்தையும் சிறிய பீடத்தையும் உள்ளடக்கியதாக அமைக்க முன்வந்தார். இவரது குடும்பம் இப்பணியைச் செய்ய ஊர்மக்களது பங்களிப்புடனும் இக் கைங்கரியம் நிறைவேறியது.

குழந்தைவேல்

கற்கண்டையா (பொன்னம்பலம் காத்தலிங்கம்)

போர்க்காலத்தில் ஒழுங்கான பூசைகள் நடைபெறாத போதும் பின்வருவோர் இக்கடமைகளை தொடர்ந்தனர்.

சின்னையா அப்பா

ஆறுமுகத்தின் மகன் குண்டையா (U.K)

தில்லையம்பலம் ஜெயராஜ்

இடையிடையே பெண் அடியார்களும் இத்தொண்டினை செய்ததாக அறிந்தோம். ஏனைய குறிப்பிடத்தக்கவர்களுள்

கந்தசாமி இராசேந்திரம் (அண்ணாவியார்)

2000 ஆம் ஆண்டுகளில் போர் ஓய்ந்த நிலையில் இதனை ஒரு நிர்வாகக் கட்டமைப்புக்குள் பொதுமக்கள் கொண்டுவந்தனர்.

எனவே பின்வருவேரரின் பங்களிப்புடன் தற்பொழுது உள்ள நிலைக்கு கட்டடம் அமைக்கப்பட்டு நித்திய பூசைகள் நடைபெற்று வருகின்றன.

1.உள்ளூர் பொதுமக்கள்

2. வெயிநாட்டில் வசிக்கும் அடியார்கள்

இதில் கீழ்க்காணும் கட்டடங்கள் ஒரு குறித்த குடும்பத்தினரால் அமைக்கப்பெற்றதாக அறிய முடிகின்றது.

1.மணிக்கோபுரம் - வெள்ளைரத்தினம் குடும்பம்

2. முன்பக்க வில்லு மண்டபம் - அப்புலிங்கம் இந்திராதேவி குடும்பம்

3.களஞ்சிய அறை – தில்லையம்பலம் இராசமயில் குடும்பம்